DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -08/2026

Prosecution PW -2

| | | |
|---|---|---|
| Name | திரு.சோமசுந்தரம் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 15.04.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused produced on PT warrant on VC On memo by the counsel, witness being examined.

(This evidence is recorded through Video Conference by using Teams Application. The witness is being in the remote site at District Court, Mayiladuthurai and who is co-ordinated by the Thiru.T.Rajkamal, System Analysist, District Court, Mayiladuthurai and this court is satisfied that the witness is not at all tutored by any body. The witness is identified by police. The Co-ordinator is directed to download this depostion and to get signed by the witness and the co ordinater and the original shall be returned to this court through post and the scanned and signed deposition shall be sent to the court's e – mail ID)

முதல் விசாரணை

நான் தற்பொழுது மயிலாடுதுறை மாவட்டம் மணல்மேடு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.04.2025ம் தேதி தஞ்சாவூர் தாலுகா காவல்நிலைய ஆய்வாளராக பணியிலிருந்தபோது, உதவி ஆய்வாளர் இளங்கோவன் என்பவர் குற்ற எண். 487/2007 பிரிவு 20(i)(b)of NDPS Actன் கீழ் வழக்கு பதிவு செய்து புலன்விசாரணை நிலுவையில் இருந்தது. அந்த வழக்குக்கோப்பினை நான் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் இளங்கோவன் என்பவர்இறந்துவிட்டார். அவருடைய கையொப்பம் எனக்கு பரிச்சையம் என்பதால் அவருக்காக சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்பட்டதன்

பேரில் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் இளங்கோவன் அவர்கள் கடந்த 16.11.2007ம் தேதி தஞ்சாவூர் தாலுகா காவல் நிலைய பயிற்சி உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது காலை 8.30 மணிக்கு இரகசியத் தகவலாளி போன் மூலம் மாரியம்மன் கோவில் சமுத்திரக்கரை ஏரியின் கீழ்புறம் கஞ்சா விற்பனை செய்வதாக கூறிய தகவலினை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து காவல் ஆய்வாளருக்கு எழுத்துமூலமாக முன் அனுமதிக் கடிதத்தை தலைமைக்காவலர் ரவிச்சந்திரன் என்பவர் மூலம் அனுப்பி வைத்துள்ளார். அந்த முன் அனுமதிக்கடிதம் அதசாஆ**.1.** பின்னர் நிலையத்திலிருந்த தலைமைக்காவலர்கள் ரவிச்சந்திரன், பழனிமுருகானந்தம் ஆகியோருடன் வழக்கிற்கு தேவையான உபகரணங்களுடன் சம்பவ இடம் சென்று கண்காணித்தபோது, அங்கு சந்தேக்கப்படும்படியாக நின்று கொண்டிருந்த ஒரு பெண் நபரை பார்ட்டி சகிதம் மடக்கிப் பிடித்து விசாரிக்க அவர் தன் பெயர் சரோஜா என்று பெயர் விலாசத்துடன் கூறினார். உதவி ஆய்வாளர் அவரிடம் நீங்கள் கஞ்சா வைத்திருப்பதாக தகவல் வந்துள்ளதாகவும், உங்களை சோதனை செய்ய வேண்டும் என்றும் அவ்வாறு சோதனை செய்ய உங்களை நீதித்துறை நடுவரிடமோ, அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிடமோ சோதனை செய்து கொள்ள உங்களுக்கு உரிமை உள்ளது என்று சொல்லி, சோதனை அறிவிப்பு நமுனா சார்வு செய்தார். அதற்கு அந்த நபர் அவ்வாறு தேவையில்லை, உதவி ஆய்வாளராகிய நீங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னார். அந்த சோதனை அறிவிப்பு நமுனா அ**.**த**.**சா**.**ஆ**-2**. பின்னர் உதவி ஆய்வாளர் எதிரி சேலைமடிப்பில் வைத்திருந்த பொட்டலத்தை எடுத்து ஆஜர் செய்ததை சோதனை செய்தபோது இலை, பூ, விதையுடன் கூடிய நிலையில் கஞ்சா இருந்தது. எதிரி கஞ்சா வைத்திருந்த குற்ற காரணம் கூறி, உதவி ஆய்வாளர் எதிரியை கைது செய்தார். எதிரி வைத்திருந்த கஞ்சாவை நாங்கள் கொண்டு வந்த தராசில் எடை போட்டு பார்த்தபோது 1.100 கிலோ கஞ்சா இருந்தது. அதில் இருந்து மாதிரிக்காகவும் பகுப்பாய்விற்காகவும் இரண்டு 50 கிராம் வீதம் கஞ்சாவை எடுத்து பாலிதீன் கவரில் போட்டு, காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி, SHO சீல் வைத்தார். மீதம் உள்ள ஒரு கிலோ கஞ்சாவை அதே பாலிதீன் கவரில் போட்டு காக்கி கவரில் மடித்து நூலால் கட்டி, ஆய்வாளர் SHO சீல் வைத்தார். மாதிரி கஞ்சாவையும் மீதம் உள்ள கஞ்சாவையும் கைப்பற்றுதல் மகசரில் தலைமைக்காவலர்கள் ரவிச்சந்திரின், பழனி முருகானந்தம் முன்னிலையில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசர் அ**.**த**.**சாஆ**-3**. பின்னர், 11.00 மணிக்கு எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம்

வந்து உதவி ஆய்வாளர் குற்ற எண். 487/2007 பிரிவு 20(i)(b)of NDPS Actன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ**.4.** பின்னர் வழக்குகோப்பினை ஆய்வாளர் பத்மநாபன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். ஆய்வாளர் பத்மநாபன் வழக்கின் மாதிரிகஞ்சாவை இரசாயண பகுப்பாய்விற்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் பணிமாறுதல் ஆகிவிட்டதால் வழக்குக்கோப்பினை 05.04.2025ம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொண்டு ஆய்வாளர் பத்மநாபன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தடயத்தை பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கிய மணிசேகரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பகுப்பாய்வு அறிக்கை பெற்றேன். அந்த பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ**.5.** இத்துடன் தன் விசாரணையை முடித்து எதிரியின் மீது பிரிவு 20(i)(b)of NDPS Actன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்

<u>குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்</u>

14.11.2007ம் தேதி கைப்பற்றப்பட்ட தடயப்பொருள் 20.02.2008ம் தேதி தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கையில் மாதிரி கஞ்சா எடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட கஞ்சா நீதிமன்ற அனுமதியின்றி அழிக்கப்பட்டுள்ளது என்றால் உயர் அதிகாரியின் உத்தரவின்படி அழிக்கப்பட்டுள்ளது. எதிரி பெண் என்பதால் பெண் காவலர் உதவியுடன் கைது மற்றும் சோதனை செய்யவில்லை என்றால் சரிதான். சொன்ன நேரம் நாள் எந்த தகவலும் வரவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எந்த தடய பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் தடய பொருட்களும் காவல் நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்